சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 29–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – K.S.கிருஷ்ணபிரபு (Pw3) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சார்பதிவாளருக்கு வந்த அழைப்பாணையின் பேரில் அவர் அனுமதி அளித்து எனக்கு கடிதம் வழங்கி அதன் பேரில் நான் ஆஜராகியுள்ளேன். பத்திர பதிவு துறை என்பது தமிழ்நாடு பத்திர பதிவு சட்டத்திற்கு கீழ் உள்ள விதிமுறைகளின் படி இயங்குகிறது என்றால் சரிதான். விவேகானந்தன் என்பவர் 03.09.2018 அன்று ஆவண எண்.2059/2018ன் படி வைஷ்ணவி என்பவருக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. அதன் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ 2**. மேற்படி ஆவணத்தில் 5 வது இனமாக சர்வே எண் 60/15ல் 1 ஏக்கர் 7 செண்ட் மேல்புறம் சரிபாதியாக நீக்கி கீழ்புறம் 53.5

செண்ட் என காட்டப்பட்டுள்ளது. ஒரு ஆவணத்தை பதிவு செய்வதற்கு முன்பு அதனை எழுதிக்கொடுப்பதற்கு உரிமை உள்ளதா என்று மூல ஆவணங்களை சரிபார்த்து பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். பதிவு செய்தவுடன் அந்த ஆவணத்தின் விபரங்கள் கணினியில் ஏற்றப்படும் என்றால் சரிதான். முதலில் ஒரு ஆவணமாக ஒரு சொத்தை பொறுத்து பதிவு செய்து அதனை கணினியில் ஏற்றம் செய்துவிட்டால், அதே சொத்தை பொறுத்து மீண்டும் பதிவு செய்வதற்கு ஆவணங்களை சரிபார்த்தால் கணினியில் உள்ள பதிவு அதனை காட்டிவிடும் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் 60/15 ல் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 7 செண்ட் மட்டும். 03.09.2018 ம் தேதியில் பிரபாகரன் என்பவர் வளர்மதிதேவிக்கு 1 வது இனமாக சர்வே எண். 60/15 ல் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 8 செண்ட் என்று காட்டி பதிவு செய்யப்பட்டு கணினியில் ஏற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 03.09.2018 ம் தேதி ஆவண எண்.2066/2018 ல் பிரபாகரன், வளர்மதிதேவிக்கு எழுதிக்ககொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ 3**. ஒரு சொத்தை பொறுத்து முதலில் ஒரு ஆவணம் எழுதி பதிவு செய்து விட்டால் அதனை ரத்து செய்யாமல் அதே சொத்தை பொறுத்து மீண்டும் ஒரு ஆவணம் எழுதி பதிவு செய்தாலும் அது செல்லாது என்றால் சரிதான். செல்லாத ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரிதான். சா.சா.ஆ 3 ஆவணம் எதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியாது. அப்போது பணியில் இருந்த அலுவலருக்கு தான் தெரியும். சா.சா.ஆ 3 பதிவு செய்யும் போது சா.சா.ஆ 2 க்கான மூல ஆவணங்கள் பரிசோதனை செய்யப்பட்டதாகவோ அல்லது புகாரின் பேரில் சா.சா.ஆ 2 ரத்து

செய்யப்பட்டதாகவோ ஆவண கோப்பில் துலங்கவில்லை என்றால் சரிதான். நான் கொண்டு வந்த ஆவண கோப்புகளை நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். ( சா.சா.ஆ 2 மற்றும் சா.சா.ஆ 3 (92 பக்கங்கள்) ).

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.